செய்தி வெளியீடு எண். 106 நாள்: 19.02.2018

# மாவட்ட குழந்தைகள் நலக்குழுவின் காலாண்டு செயல்பாடுகள் குறித்த அறிவுரை குழு, ஆய்வுக்குழு கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியா அலுவலக கூட்டரங்கத்தில் சமூக பாதுகாப்புத்துறையின் கீழியங்கும் திருவள்ளூர் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகின் சார்பாக குழந்தைகளின் உரிமைகளை பாதுகாத்தல் மற்றும் பெண்கள், குழந்தைகள் கடத்தல் மற்றும் பாலியல் ரீதியான துன்புறுத்தலை தடுத்தல் குறித்த மாவட்ட குழந்தைகள் பாதுகாப்புக்குழு கூட்டம், மாவட்ட அறிவுரைக்குழுக் கூட்டம், மாவட்ட ஆய்வுக்குழு கலந்தாய்வுக் கூட்டம் மற்றும் மாவட்ட குழந்தைகள் நலக்குழுவின் காலாண்டு செயல்பாடுகள் குறித்த கூராய்வுக் கூட்டம் ஆகிய கூட்டங்கள் ஒருங்கிணைத்து மாவட்ட ஆட்சி தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் கூறியதாவது :

முதன்மை கல்வி அலுவலருடன் ஒருங்கிணைந்து அனைத்து பள்ளிகளிலும் குழந்தைகள் பாதுகாப்பு குறித்தும் மற்றும் சைல்டு லைன் 1098, 1077 உதவி எண் குறித்தும் ஒவியம் வரைந்து அதன் மூலம் குழந்தைகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துமாறு அறிவுறுத்தினார். மேலும், வட்டார மற்றும் கிராம அளவிலான குழந்தைகள் பாதுகாப்பு குழு கூட்டம் தொடர்ந்து நடத்துவதற்கு ஏதுவாக வருவாய் கோட்டாசியர் மூலம் வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கு நடத்தப்படும் கூட்டத்திலும், துணை இயக்குநர், சுகாதார பணிகள் மூலம் கிராமப்புற செவிலியர்களுக்கு நடத்தப்படும் கூட்டத்திலும் கலந்துக்கொண்டு வட்டார மற்றும் கிராம அளவிலான குழந்தைகள் பாதுகாப்புக்குழு கூட்டம் குறித்து முக்கியத்துவம் குறித்து அறிவுறுத்துமாறு தெரிவித்தார். குழந்தை திருமணம் நடத்த அனுமதிக்கும் திருமண மண்டப உரிமையாளர்கள் மீது வட்டாட்சியர்கள் மூலம் உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும் குழந்தை திருமணம் குறித்து பத்திரிக்கைகளில் செய்தி வெளியிட்டு விழிப்புணர்வு ஏற்படுத்துமாறு ஆலோசனை வழங்கினார். மேலும், திருவள்ளூர் மாவட்டம் அரசு பொது மருத்துவமனையின் மனநல மருத்துவர் வாயிலாக அனைத்து பள்ளிகளிலும் போதை மறுவாழ்வு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதாகவும், மேலும், மருத்துவ மனையில் போதை மறுவாழ்விற்காக சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும் அதை பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

மேலும், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகின் வாயிலாக திருவள்ளூர் மாவட்டத்தில் செயல்படும் குழந்தைகள் இல்லங்களில் 95 இல்லங்கள் இளைஞர் நீதிச் (பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம் 2015-ன் கீழ் பதிவு செய்யப்பட்டு சமூக பாதுகாப்புத்துறையின் மூலமாக பதிவு சான்று பெறப்பட்டுள்ளது என்றும் இல்லத்திலுள்ள 3172 குழந்தைகளில் 2924 குழந்தைகளுக்கு ஆதார் எண்ணும், 2088 குழந்தைகளுக்கு வங்கி கணக்கு பெறப்பட்டுள்ளதாகவும், நிதி ஆதரவு திட்டத்தின் வாயிலாக 41 குழந்தைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக மாதந்தோறும் ரூ.2000-ம் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளதாகவும், பிற்காப்பு பராமரிப்பு திட்டத்தின்

கீழ் 16 குழந்தைகள் பயன்பெற்று வருகின்றனர் என்றும், வளர்ப்பு பராமரிப்பு திட்டத்தின்கீழ் குழந்தைகள் தேவைப்படும் பெற்றோர்கள் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகினை அனுகலாம் என்றும் தெரிவித்தார். மேலும், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகின் கடந்த ஒரு வருட செயல்பாடுகள் குறித்த மதிப்பீட்டு படிவம் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் விளக்கினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் திரு.ப.செந்தில், செயலாளர், மாவட்ட சட்ட பணிகள் ஆணைக்குழு, கல்வித்துறை அலுவலர், மருத்துவ துறை அலுவலர்கள், தொழிலாளர் நலத்துறை அலுவலர், மாவட்ட சமூக நல அலுவலர், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் மறுவாழ்வு நல அலுவலர், காவல்துறை அலுவலர், குழந்தைகள் நலக்குழு தலைவர் மற்றும் உறுப்பினர், இளைஞர் நீதிக்குழும உறுப்பினர், தொண்டு நிறுவன பிரதிநிதிகள் மற்றும் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகின் பணியாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**